# கிழக்குப் பல்கலைக்கழகம், இலங்கை

## நான்காம் வருட முதலாம் அரையாண்டு சிறப்பு கல்விமாணித் தேர்வு - 2011/2012

## (2017 – July/AUGUST)

## EDS 4133 கற்றலின் அளவீடும் மதிப்பீடும்

## (Evaluation of Learning Outcome)

நேரம்: 03 மணித்தியாலங்கள்

எவையேனும் நான்கு வினாக்களுக்கு மாத்திரம் விடை தருக

---

1) அ) மாணவனொருவனின் மொத்த விளைவினை கருத்திற் கொள்ளும்போது அவனை பண்பு ரீதியாகவும் , அளவு ரீதியாகவும் மதிப்பிட வேண்டியது அவசியமாகும். இதன்படி அவனது பண்பினை உறுதிப்படுத்திக் கொள்ள கணிப்பீடும் (Assessment) அவனது தரத்தினை உறுதிப்படுத்திக்கொள்ள அளவீடும் (Measurement) பாடசாலை மட்டத்தல் பயன்பாட்டில் உள்ளது. வகுப்பறைச் செயற்பாட்டில் இதன் பயன்பாட்டின் வினைத்திறனை ஆராய்க?

(13 புள்ளிகள்)

ஆ) மாணவனின் அடைவு மட்டத்தை வெளிக்காட்டும் நியமம் சார் அளவீடு, நியதி சார் அளவீடு என்பவற்றை விளக்குக? (06 புள்ளிகள்)

இ) பாடசாலையில் பயன்படுத்தப்படும் முக்கிய மதிப்பீட்டின் வகைகள் இரண்டினைக் குறிப்பிட்டு அதன் பிரயோக செயற்பாட்டினை விளக்குக? (06 புள்ளிகள்)

2) அ) 'தேசிய ரீதியில் எதிர்பார்ப்புகள் சிலவற்றை அடையப்பட வேண்டுமாயின் அந்த எதிர்பார்ப்புகளின் அடிப்படைக்கூறு வகுப்பறை மட்டத்தில் நிறை வேற்றப்படுவதன் மூலம் நிறைவு செய்யப்படும்.' இக்கூற்றின் அடிப்படை விளக்கத்தை முன்வைத்து தேசிய இலக்கு, வகுப்பறையின் விசேட குறிக்கோள் ஆகியவற்றிற்கிடையிலான தொடர்பினை ஆராய்க?

(13 புள்ளிகள்)

ஆ) வகுப்பறையில் விசேட குறிக்கோள் அமைக்கப்படுவதன் முக்கிய நன்மைகள் 6 இனை முன்வைத்து சுருக்கமாக விளக்குக? (06 புள்ளிகள்)

இ) "சமுதாயத்தின் தேவையானது பாடசாலையில் நடைமுறைப்படுத்தப்படும் கலைத்திட்ட செயற்பாட்டினூடாக அடையப்படும்" வகுப்பறைச் செயற்பாட்டுடன் தொடர்புபடுத்தி இக் கூற்றினை விளக்குக? (06 புள்ளிகள்)

3) அ) அறிகை ஆட்சிக் கல்விக்குறிக்கோளின் அறிவுவிருத்தி , அறிவாற்றல் விருத்தி பற்றிய புளுமின் பகுப்பு பற்றிய உமது விளக்கத்தை தருக? (10 புள்ளிகள்)

ஆ) அளவீட்டுக்கருவியொன்றின் நம்பகத்தன்மையைத் தீர்மானிப்பதற்கு பயன்படுத்தப்படும் மூன்று கணிப்பீட்டு முறைகளை முன்வைத்து இவற்றில் ஏதாவது ஒரு முறை மூலம் எவ்வாறு நம்பகம் தீர்மானிக்கப்படுகின்றதென்பதை விளக்குக?

(10 புள்ளிகள்)

இ) சோதனையொன்றின் நம்பகப் பெறுமதியில் செல்வாக்கு செலுத்தும் காரணிகள் 5 இனை முன்வைக்குக? (05 புள்ளிகள்)

4) அ) கட்டுரைவகைச் சோதனையின் குறைபாடுகளைத் தீர்ப்பதற்கு உருவாக்கப்பட்ட புறவயச்சோதனையின் சிறப்பியல்புகள் 8 இனை தருக? (08 புள்ளிகள்)

ஆ) வகுப்பறைச் செயற்பாட்டில் விசேட குறிக்கோளை ஏற்படுத்துவதன் மூலம் கிடைக்கக்கூடிய 5 அனுகூலங்களை முன்வைத்து விளக்குக? (05 புள்ளிகள்)

இ) நுண்ணறிவு பற்றிய சார்ள்ஸ் பியர்மனின் இருகாரணிக் கொள்கை பற்றி விளக்கி, பிரச்சினையொன்றை தீர்மானிப்பதில் இவ்வறிவு எவ்வளவு தூரம் ஆசிரியருக்கு முக்கியத்துவமாகின்றது என்பதை ஆராய்க? (12 புள்ளிகள்)

5) அ) திறன், உளச்சார்பு என்பதை வரையறுத்து விளக்குக? (07 புள்ளிகள்)

ஆ) மாணவரினால் விடப்படும் அடிப்படையான பிழைகளையும் பிரதான குறைபாடுகளையும் கண்டறிவதற்காக உபயோகிக்கப்படும் சோதனை முறையை வகுப்பறை செயற்பாட்டின் உதாரணத்தின் மூலம் விளக்குக? (09 புள்ளிகள்)

இ) எழுச்சிசார் வளர்ச்சியில் முக்கியமான கற்றல் பெறுபேறு ஒன்றை விளக்கி, அதை எவ்வாறு பண்பு ரீதியாக அடையலாம் என்பதை எடுத்துக்கூறுக? (09 புள்ளிகள்)

6) அ) இருமாறிகளுக்கிடையிலான தொடர்பினை விளக்குவதில் இணைபுக்குணகம் முக்கியமானதாகும். இதன் அடிப்படையில் இரு மாறிகளுக்கிடையிலான தொடர்பில் $r=+1$, $r=-1$, $r=0$ என்பனன பற்றிய உமது வியாக்கியானத்தை முன்வைத்து விளக்குக?

(10 புள்ளிகள்)

ஆ) கணிதபாட அடைவினை மேம்படுத்தும் ஒரு செயற்றிட்டமொன்றின் முன்னோடிப்பரீட்சை மாகாண மட்டத்தில் நடத்தப்பட்டது. இப்பரீட்சையில் மாணவர்கள் பெற்ற புள்ளித் தொகுதியொன்றின் கூட்டலிடை $\bar{x} = 46$ உம் நியம விலகல் $\sigma = 10$ உம் ஆகும். புள்ளிகள் செவ்வன் வளையியில் அமைந்துள்ளதினைக்கொண்டு இதனை A,B,C,D, E தரவாக பார்க்கும் போது ஒவ்வொரு தொகுதியினதும் வெட்டுப்புள்ளியை காண்க? (15 புள்ளிகள்)